


அகர முதல
மின்னிதழ்
Aagaramuthalaa
www.Aagaramuthalaa.com

விளம்பர தொடர்புக்கு
9597887847 / 8870884969

புதன், டிசம்பர் 08.2021

மலர்:12 இதழ்:20

# குன்னூர்:ராணுவ ஹெலிகாப்டர் விபத்து

## விபத்தில் சிக்கிய முப்படை தலைமை தளபதி பிபின் ராவத் உயிரிழப்பு

## ஓமிக்ரான் வைரஸ் பெரிய அளவில் பாதிப்பை ஏற்படுத்தாது-ஆய்வில் தகவல்




தென்னாப்பிரிக்காவில் கண்டறியப்பட்ட ஓமிக்ரான் எனும் புதிய வகை கரோனா தற்போது உலகின் மிகப்பெரிய அச்சுறுத்தலாக மாறியுள்ளது. அமெரிக்கா, சிங்கப்பூர், மலேசியா, இந்தியா உள்ளிட்ட 25க்கும் மேற்பட்ட நாடுகளில் பரவியுள்ளது. இந்நிலையில் ஓமிக்ரான் தடுப்பு நடவடிக்கையாக, பொதுமக்களுக்கு கரோனா தடுப்பூசி போடும் பணிகளை உலக நாடுகள் முடுக்கிவிட்டுள்ளன. இந்தியாவில் பாதுகாப்பு ஏற்பாடுகள் மிகவும் தீவிரமாக கண்காணிக்கப்படுகிறது. விமான நிலையங்களில் வெளிநாட்டுப் பயணிகளுக்கு கரோனா நெகட்டிவ் சான்றிதழ் கட்டாயமாக்கப்பட்டுள்ளது. இருந்தும் இந்தியாவில் ஓமிக்ரான் தொற்று பரவியுள்ளது. இந்தியாவில் ஏற்கனவே, கர்நாடகாவில் 2 பேருக்கும், மஹாராஷ்ட்ரா 10 குஜராத் 1, டெல்லி 1, ராஜஸ்தான் 9, என இந்தியாவில் ஓமிக்ரான் பாதிப்பு எண்ணிக்கை 23 ஆக உள்ளது. இந்நிலையில், இந்தத் தொற்று தொடர்பாக தென்னாப்பிரிக்க ஆராய்ச்சி கழகம் முக்கிய அறிவிப்பு ஒன்றை வெளியிட்டுள்ளது. அதில், ஓமிக்ரான் தொற்று எதிர்பார்க்கும் அளவுக்குப் பெரிய பாதிப்பை ஏற்படுத்தாது. உயிரிழப்பு எண்ணிக்கையும் மிக மிக குறைவாக இருக்கும். இன்னும் இரண்டு அல்லது மூன்று வாரங்களில் நிலைமை மாறலாம், என்று தெரிவித்துள்ளது.

## ஓபிஎஸ், இபிஎஸ் போட்டியின்றி தேர்வு-அதிமுக அறிவிப்பு!




அதிமுக கட்சியின் ஒருங்கிணைப்பாளர் மற்றும் இணை ஒருங்கிணைப்பாளர் பதவிக்கான தேர்தல் வரும் டிசம்பர் 7 ஆம் தேதி அன்று நடைபெற உள்ளதாக அறிவிக்கப்பட்டிருந்த நிலையில் ஒருங்கிணைப்பாளராக ஓ. பன்னீர்செல்வமும் மற்றும் கட்சியின் இணை ஒருங்கிணைப்பாளராக எடப்பாடி பழனிசாமியும் போட்டியின்றி தேர்வு செய்யப்பட்டுள்ளதாக அதிமுக தலைமை அறிவித்துள்ளது. உட்கட்சி தேர்தலுக்கான வேட்பு மனுத்தாக்கல் தொடங்கியது. இந்த நிலையில், சென்னை ராயப்பேட்டையில் உள்ள அதிமுகவின் தலைமை அலுவலகத்திற்குக் கடந்த 04/12/2021 காலை 11.30 மணிக்குச் சென்ற அதிமுகவின் தற்போதைய ஒருங்கிணைப்பாளர் ஓ. பன்னீர்செல்வம் மற்றும் கட்சியின் இணை ஒருங்கிணைப்பாளர் எடப்பாடி பழனிசாமி ஆகிய இருவரும், கூட்டாகத் தேர்தல் நடத்தும் ஆணையாளர்கள் பொன்னையன், பொள்ளாச்சி ஜெயராமன் ஆகியோரிடம் ஒருங்கிணைப்பாளர், இணை ஒருங்கிணைப்பாளர் பதவிக்கான வேட்பு மனுவைத் தாக்கல் செய்தனர். இந்நிலையில் இந்த அறிவிப்பினை அதிமுக தேர்தல் ஆணையர்கள் தெரிவித்துள்ளனர்.









CREW & PASSENGER MANIFEST
AIRCRAFT No: K-3602 FROM DELHI TO SULUR
PASSENGER DETAILS
Date: 08-12-21

| S No | Names | Designation | Nationality | Whether Recovery to be effected | Official/ Non Official | Remarks |
|---|---|---|---|---|---|---|
| 01 | Gen Bipin Rawat, PVSM,UYSM, AVSM, YSM, SM, VSM, ADC | CDS | Indian | NA | Official | |
| 02 | Mrs Madhulika Rawat | President DWWA | Indian | NA | Official | |
| 03 | Brig LS Lidder, SM,VSM | DA to CDS | Indian | NA | Official | |
| 04 | Lt Col Harjinder Singh | SO to CDS | Indian | NA | Official | |
| 05 | NK Gursewak Singh | PSO | Indian | NA | Official | |
| 06 | NK Jitendra Kumar | PSO | Indian | NA | Official | |
| 07 | L/NK Vivek Kumar | PSO | Indian | NA | Official | |
| 08 | L/NK B Sai Teja | PSO | Indian | NA | Official | |
| 09 | Hav Satpal | PSO | Indian | NA | Official | |

நீலகிரி மாவட்டம், குன்னூர், வெலிங்கடனில் ராணுவ உயரதிகாரிகளுக்கான பயிற்சிக் கல்லூரி உள்ளது. இங்கு இன்று நடக்க இருந்த ராணுவ உயரதிகாரிகளுக்கான கூட்டத்தில் பங்கேற்பதற்காக இந்திய முப்படைத் தலைமை தளபதி பிபின் ராவத், அவரது மனைவி மற்றும் நான்கு பைலட்கள் உள்பட 14 பேர், கோவை மாவட்டம், சூலூரிலுள்ள ராணுவ விமானப்படைத் தளத்திலிருந்து 11.30 மணியளவில் ஹெலிகாப்டரில் வெலிங்டன் நோக்கி கிளம்பினர்.குன்னூர் மலைப்பகுதியில் காட்டேரி பள்ளத்தாக்குக்கு மேலே பறந்த போது கட்டுப்பாட்டை இழந்த ஹெலிகாப்டர் மரத்தில் மோதி விபத்துக்குள்ளானது. இந்த விபத்தில் ஹெலிகாப்டர் முழுவதும் தீப்பற்றி எறிந்தது. இந்த விபத்தில் 10 பேர் உயிரிழந்ததாக முதற்கட்ட தகவல் வெளியானது. இந்நிலையில், ஹெலிகாப்டர் விபத்தில் மொத்தம் 13 பேர் உயிரிழந்துள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. ஏ.என்.ஐ செய்தி நிறுவனம் வெளியிட்ட தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும், மரபணு பரிசோதனை மூலம் உயிரிழந்தவர்களின் விவரங்களை கண்டறியும் பணிகள் நடைபெற்று வருவதாகவும் ஏ. என். ஐ செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது. ஹெலிகாப்டர் விபத்தில் 13 பேர் உயிரிழந்துள்ளதாக தகவல் வெளியாகியுள்ள நிலையில் முப்படைகளின் தலைமை தளபதி பிபின் ராவத்தின் நிலை என்ன ஆனது என்பது குறித்த தகவல் இதுவரை வெளியாகவில்லை. இந்த விபத்து குறித்து நஞ்சப்பா சத்திரம் பகுதியில் வசித்திவரும் முதியவர் கூறியதாவது: ஹெலிகாப்டர் வந்து கொண்டிருந்தது . ஒரே சத்தமாக இருந்தது. கிழே இருக்கும் மரத்தில் இடித்து ஹெலிகாப்டர் நொறுங்கி கிழே விழுந்தது. உடனே கடும் புகை ஏற்பட்டது. அருகில் இருப்பவரை அழைத்து தீயணைப்பு வீரர்களுக்கு அழைக்கச் சொன்னேன். அதற்குள் ஒருவர் எரிந்து விழுகிறார். தொடர்ந்து மற்ற நபர்களும் எரிந்து கிழே விழுந்தனர், என்று தெரிவித்தார். தொடர்ந்து அப்பகுதியை சேர்ந்த மற்றும் ஒருவர் விபத்து குறித்து கூறியதாவது.என்னோடு வேலை செய்பவருக்கு தொலைபேசியில் விபத்து நடந்து குறித்து தகவல் வந்தது . தொடர்ந்து சம்பவ இடத்திற்கு வந்தபோது எல்லா இடத்திலும் தீ பற்றத் தொடங்கியது. ஒரு காவல்துறை அதிகாரி மட்டும் இருந்தார். உதவுவதற்காக நாங்கள் அவருடன் சென்றோம். பனிமூட்டமாக இருந்தது . இந்த விபத்து நடந்தபோதும் மேகமூட்டமாகத்தான் இருந்திருக்கிறது . ஒரு ராணுவ அதிகாரி கையசைத்து உதவி கேட்டார். அவரை போர்வையை சுற்றி மீட்டு வந்து மருத்துவமனையில் அனுமதித்தோம். எப்போதும் இந்தப் ஹெலிகாப்டர் செல்வது வழக்கம். தரையிலிருந்து உயரமாக எப்போதும் செல்லும் ஹெலிகாப்டர் இன்று தாழ்வாக சென்றுள்ளது. மரத்தில் மோதி, பின்னோக்கி சென்று கீழே விழுந்துள்ளது. குடியிருப்பு பகுதியில் விழவில்லை. என்று அவர் தெரிவித்தார்.






# அகர முதல

மின்னிதழ்

Aagaramuthalaa | www.Aagaramuthalaa.com



விளம்பர தொடர்புக்கு
9597887847 / 8870884969



புதன், டிசம்பர் 08,2021 | கடலூர் | மலர்:12 இதழ்:20


# கடலூர் மாவட்ட செய்திகள்

## வடலூரில் வேலைவாய்ப்பு முகாம் 595 பேருக்கு பணி நியமன ஆணை

## ஒமிக்ரான் வைரஸ் அச்சுறுத்தல்-கடலூரில் அரசு மருத்துவமனைகளுக்கு வருபவர்களுக்கு தடுப்பூசி கட்டாயம்






உலகம் முழுவதும் கடந்த சில மாதங்களாக கொரோனா பதிப்பானது படிப்படியாக குறைந்து வந்த நிலையில் கடந்த சில நாட்களுக்கு முன் தென் ஆப்பிரிக்காவில் கண்டறியப்பட்ட புதிய வகை கொரோனா வைரசான !ஒமிக்ரான் தற்போது உலக நாடுகளை அச்சுறுத்தி வருகிறது. இந்த வைரசுக்கு பயந்து பல நாடுகள் தங்களது எல்லைகளை மூடி உள்ளன. ஒமிக்ரான் பாதிப்பு உள்ள நாடுகளில் இருந்து விமான சேவைகளையும் ரத்து செய்யப்பட்டு வருகிறது. இந்நிலையில் வெளிநாடுகளில் இருந்து தமிழகம் வரும் பயணிகளை கண்காணிக்க தனி குழு அமைக்கப்பட்டு உள்ளது. தமிழகம் வரும் வெளிநாட்டு பயணிகளுக்கு மீண்டும் கொரோனா பரிசோதனை செய்து அவர்களை தனிமைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.இதன்படி கடலூர் மாவட்டத்திலும் வெளிநாடுகளில் இருந்து வருவோரை கண்காணிக்க சுகாதாரத்துறையினர் நடவடிக்கை எடுத்து வருகின்றனர். குறிப்பாக தென் ஆப்பிரிக்கா, ஐரோப்பா போன்ற நாடுகளில் இருந்து வருவோரை கண்காணிக்க அதிகாரிகள் தயாராகி வருகின்றனர் . இதற்கிடையில் இந்த வைரஸ் எச்சரிக்கையாக கடலூர் அரசு மாவட்ட மருத்துவமனைக்கு வருவோர் கட்டாயம் தடுப்பூசி போட வேண்டும் என்று கண்காணிப்பாளர் டாக்டர் சாய்லீலா அவர்கள் கூறினார். இருப்பினும் 100 சதவீதம் அனைவரும் கொரோனா தடுப்பூசி போட வேண்டும். முக கவசம் அணிய வேண்டும். அது தான் இதை தடுக்க நிரந்தர தீர்வாக இருக்கும் என்றார். இது பற்றி அவர் மேலும் கூறுகையில், ஒமிக்ரான் வைரஸ் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக கடலூர் அரசு மருத்துவமனைக்கு வரும் அனைவரும் கட்டாயம் கொரோனா தடுப்பூசி போட்டு இருக்க வேண்டும், குறிப்பாக நோயாளிகளை கவனிப்பதற்காக உடன் இருப்பவர்கள் கட்டாயம் தடுப்பூசி போட்டு இருக்க வேண்டும். தடுப்பூசி போடாமல் வருவோருக்கு கடலூர் அரசு மருத்துவமனைக்கு வர தடை விதிக்கப்படுகிறது. அதேபோல் மருத்துவமனைக்கு வரும் அனைவரும் முக கவசம் அவசியம் அணிய வேண்டும். இல்லையென்றால் அனுமதி கிடையாது. சமூக இடைவெளியை கடைபிடிக்க வேண்டும் என்றார். அரசு மருத்துவ மனையில் 800 க்கும் மேற்பட்ட ஊழியர்கள் மற்றும் மருத்துவர்கள் பணியில் உள்ளார்கள் எனவே அவர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் விதமாக மக்களாகிய நீங்கள் அனைவரும் கட்டாயம் தடுப்பூசி செலுத்திக் கொண்டு சிகிச்சை பெற வேண்டும் மேலும் நோயாளிகளுக்கு உதவியாளராக இருக்கும் உறவினர்கள் கட்டாயம் தடுப்பூசி போட்டுக் கொண்டால் மட்டுமே உள்ள அனுமதிக்கப்படுவார்கள் என கூறினார். இல்லை என்றால் அரசு மருத்துவமனையிலே தடுப்பூசி போட்டுகொள்ள வேண்டும் என கேட்டுகொண்டார்.

கடலூர் மாவட்டம் வடலூரில் மகளிர் திட்டம் சார்பில் அரசு பெண்கள் மேல்நிலைப்பள்ளியில் தனியார் வேலைவாய்ப்பு முகாம் நடந்தது இதில் 67 தனியார் நிறுவனங்கள் கலந்து கொண்டனர். வடலூர், குறிஞ்சிப்பாடி, நெய்வேலி, பண்ருட்டி, விருத்தாசலம், காட்டுமன்னார்கோவில், புவனகிரி உள்ளிட்ட பகுதிகளை சேர்ந்த 8 ஆயிரத்துக்கும் மேற்பட்ட இளைஞர்கள், இளைம்பெண்கள் கலந்து கொண்டனர். காலை 10 மணிக்கு துவங்கிய முகாம் மாலை 5 மணி வரை நடைபெற்றது. இதில் வேளாண் மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்கே பன்னீர்செல்வம் கலந்து கொண்டு முகாமில் தேர்வு பெற்ற 595 பேருக்கு பணி நியமன ஆணை வழங்கினார். இதில் அமைச்சர் பன்னீர்செல்வம் செய்தியாளர்களிடம் கூறியதாவது தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் சார்பில் இந்த வேலை வாய்ப்பு முகாம் நடக்கிறது. 67 நிறுவனங்கள் கலந்து கொண்டு இது வரை 500 க்கு மேற்பட்டோருக்கு பணி நியமன ஆணை வழங்கப்பட்டுள்ளது. இதில் சுமார் 7 ஆயிரம் பேர் கலந்து கொண்டு உள்ளனர். இந்த அளவுக்கு இளைஞர்கள் அதிகமாக வருவதற்கு காரணம், வேலை வாய்ப்பு இல்லை. இதற்கு காரணம் 10 ஆண்டு காலம் தேக்கம் ஏற்பட்டுள்ளது. தமிழகம் முழுவதும் வேலை வாய்ப்பு முகாம் நடத்த முதல்வர் உத்தரவிட்டுள்ளார். இது போன்ற சிறப்பான பணிகளை முதல்வர் செய்து வருகிறார். இதனால் அவர் மீது தமிழக மக்களுக்கு நம்பிக்கை வந்துள்ளது. இதே போல் நடைபெற்ற முகாம் மூலம் இளைஞர்களுக்கும் நம்பிக்கை வந்துள்ளது. தமிழக அரசும் அனைத்து துறைகளிலும் வேலை வாய்ப்பை வழங்கி வருகிறது. தமிழ்நாடு தேர்வாணையமும் வேலை வாய்ப்பை வழங்கி வருகிறது என்றார்.கடலூர் மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில் நெறி வழிகாட்டு மையம் ஆகியன சார்பில் வேலை வாய்ப்பு முகாம் திட்டக்குடி ஞானகுரு வித்யாலயா மெட்ரிக் மேல்நிலை பள்ளியில் நடைபெற்றது. முகாமில் 141 தனியார் நிறுவனங்கள் பங்கேற்றனர். இதில் கடலூர், விருத்தாசலம், பண்ருட்டி, வேப்பூர், நெய்வேலி, அரியலூர், பெரம்பலூர் உள்ளிட்ட பகுதிகளில் இருந்து சுமார் 5 ஆயிரத்திற்கும் மேற்பட்ட இளைஞர்கள், பெண்கள் ஆர்வத்துடன் பங்கேற்றனர். முகாமில், பல்வேறு நிறுவனங்களில் வேலை வாய்ப்பு பெற்ற 570 பேருக்கு பணிநியமனத்துக்கான ஆணையை அமைச்சர் சி.வெ. கணேசன் வழங்கினார். மேலும் 938 பேர் 2—ம் கட்ட தேர்வுக்கு தேர்ந்தெடுக்கப்பட்டனர். 101 இளைஞர்கள் திறன் பயிற்சிக்காக பதிவு செய்தனர். 272 பேர் வெளிநாட்டு வேலை வாய்ப்புக்கு பதிவு செய்தனர்.பின்னர் அமைச்சர் சி.வெ. கணேசன் கூறுகையில், முதல்—அமைச்சர் மு.க.ஸ்டாலின் ஆணைக்கிணங்க கடந்த 3 மாதங்களில் தமிழகத்தில் 11 வேலைவாய்ப்பு முகாம்கள் நடத்தப்பட்டுள்ளது. இதில் 11 ஆயித்து 300—க்கும் மேற்பட்டவர்களுக்கு வேலை வாய்ப்பு பெற்று இருக்கிறார்கள் அதேபோல், கடந்த 10 ஆண்டுகளில் தொழிலாளர் நல வாரியத்திற்கு வேண்டிய நலத்திட்ட உதவிகளை எதுவும் வழங்காத நிலையில், தமிழக முதல்—அமைச்சராக மு.க.ஸ்டாலின் பதவியேற்ற உடன் 50 ஆயிரத்திற்கும் மேற்பட்ட தொழிலாளர்களுக்கும் பல்வேறு நலத்திட்டங்கள் வழங்கப்பட்டுள்ளது என கூறினார்.

## கடலூரில் மாலை அணிவித்து மாணவர்களை வரவேற்ற கலெக்டர்



கடலூர் ஊராட்சி ஒன்றியம் பில்லாலி ஊராட்சியில் இல்லம் தேடி கல்வி மையம் திறப்பு விழா நடந்தது. இதில் மாவட்ட கலெக்டர் பாலசுப்பிரமணியம் கலந்து கொண்டு இல்லம் தேடி கல்வி மையத்தை திறந்து வைத்தார் . முன்னதாக இந்த மையத்திற்கு வந்த மாணவர்களை உற்சாகப்படுத்தும் வகையில் அவர்களை மலர் மாலை அணிவித்து கலெக்டர் வரவேற்றார் அப்போது மேள தாளங்களுடன் முழங்க சிறப்பான வரவேற்பு அளிக்கப்பட்டது. தொடர்ந்து இத்திட்டத்தினை முழுமையாக பயன்படுத்தி மாணவர்களிடையே ஏற்பட்டுள்ள கற்றல் இடை வெளியை குறைப்போம் என்றும், மாணவர்கள் கல்வி கற்பதில் முழு கவனத்தை செலுத்துவோம் என்றும் மாணவர்களுக்கு கல்வி கற்பிற்கும் தன்னார்வலர்கள் உறுதிமொழி ஏற்றுக்கொண்டனர். அதைத்தொடர்ந்து மாணவர்களுக்கு நோட்டு புத்தகங்கள், பேனா உள்ளிட்ட கல்வி உபகரணங்களை கலெக்டர் வழங்கி கூறியதாவது :— கொரோனா பெருந்தொற்று காலத்தில் 1 முதல் 8 ம் வகுப்பு வரை உள்ள மாணவர்களிடையே ஏற்பட்டுள்ள கற்றல் இடைவெளியைக் குறைக்க " இல்லம் தேடிக் கல்வி " திட்டத்தினை முதல்—அமைச்சர் தொடங்கி வைத்தார். இத்திட்டத்தின் முக்கிய நோக்கம், மாணவர்கள் வரும் கல்வியாண்டில் அடுத்த வகுப்புக்கு செல்லும் போது அவர்கள் அதற்கு முழுத்தகுதி படைத்தவர்களாக இருப்பார்கள். மாணவர்களிடையே ஏற்பட்ட கற்றல் இடைவெளி மற்றும் இழப்புகளை ஈடுசெய்வதற்காகவும் , இடைநின்ற மாணவர்களை கண்டறிந்து மீண்டும் பள்ளியில் சேர்ப்பதற்காகவும், தன்னார்வலர்களை கொண்டு தினசரி 1 முதல் 1 ½ மணி நேரம் தினமும் மாலை 5 மணி முதல் 5 மணிக்குள் கற்றல் செயல்பாடுகளை மேற்கொள்ள இல்லம் தேடி கல்வி மையங்கள் உருவாக்கப்பட்டன. இல்லம் தேடிக் கல்வி மையங்களில் கற்பித்தல் சேவையை மேற்கொள்ள தன்னார்வலர்கள் இணையவழி பதிவு செய்திருந்தனர். மேலும் ஒவ்வொரு குடியிருப்பு பகுதியில் இருந்தும் தேர்வு செய்யப்பட்ட தன்னார்வலர்களுக்கு இருநாட்கள் இத்திட்டம் சார்ந்த பயிற்சி அளிக்கப்பட்டது. பயிற்சி பெற்ற தன்னார்வலர்கள் பள்ளிக்கு சென்று உற்று நோக்கல் பயிற்சியில் ஈடுபட்டுள்ளனர். இத்திட்டமானது ஒரு அரசுத் திட்டமாக மட்டுமில்லாமல் பெற்றோர்கள், பொதுமக்கள், தன்னார்வலர்கள், ஆசிரியர்கள், பல துறையை சார்ந்த பிரபலங்கள் என அனைவரும் இணைந்து முன்னெடுத்துச் செல்லும் ஒரு இயக்கமாக திட்டமிடப்பட்டுள்ளது. இவ்வாறு கலெக்டர் கூறினார். முன்னதாக இந்த திட்டத்தை அனைவருக்கும் கொண்டு செல்லும் வகையில் பல்வேறு விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன. இதில் கூடுதல் கலெக்டர் வருவாய்ரஞ்ஜீத்சிங் மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் பூபதி, மாவட்ட உதவி திட்ட அலுவலர் எல்லப்பன் கடலூர் மாவட்ட கல்வி அலுவலர் அமுதா, வட்டார கல்வி அலுவலர் சரளா, ஆசிரியர்கள், பெற்றோர்கள் மாணவர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## விருத்தாசலம்உதவி போலீஸ் சூப்பிரண்டு அலுவலகத்தில் டி.ஐ.ஜி. ஆய்வு



விருத்தாசலம் உதவி போலீஸ் சூப்பிரண்டு அலுவலகத்தில் விழுப்புரம் சரக போலீஸ் டி. ஐ. ஜி. பாண்டியன் நேற்று திடீர் ஆய்வு மேற்கொண்டார். அப்போது அவர், அங்கு விருத்தாசலம், ஆலடி, மங்கலம்பேட்டை, பெண்ணாடம், கம்மாபுரம், கருவேப்பிலங்குறிச்சி ஆகிய போலீஸ் நிலையங்களில் உள்ள குற்ற வழக்குகள் தொடர்பான ஆவணங்களை பார்வையிட்டதுடன், போலீசார் வருகை பதிவேடு ஆகியவற்றையும் பார்வையிட்டு ஆய்வு செய்தார். மேலும் அங்கிருந்த இன்ஸ்பெக்டர்கள், சப்—இன்ஸ்பெக்டர்களிடம் புகார் கொடுக்க காவல் நிலையங்களுக்கு வரும் பொதுமக்களிடம் கனிவுடன் நடந்து கொள்வதோடு, ஸைவும் டி. ஐ. ஜி . பாண்டியன் அறிவுறுத்தினார். ஆய்வின்போது உதவி போலீஸ் சூப்பிரண்டு அங்கித் ஜெயின், இன்ஸ்பெக்டர்கள் விஜயரங்கன், விஜயக்குமார், குமார், ரேவதி, சப்—இன்ஸ்பெக்டர்கள் கமல்ஹாசன், பொட்டா, பாக்யராஜ், தனிப்பிரிவு போலீஸ்காரர் பாலமுருகன் ஆகியோர் உடனிருந்தனர்.

## கடலூர்: ஓடைக்குள் காத்திருப்பு போராட்டம் நடத்தும் கிராம மக்கள்

# சாலை, பாலம் வசதிகள் செய்து தர கோரிக்கை





கடலூர் மாவட்டத்தில் கடந்த மாதம் இறுதியில் தொடர்ந்து ஒரு வார காலமாக தொடர் கனமழை பெய்தது இதன் காரணமாக பல்வேறு குடியிருப்பு பகுதிகளில் மழை நீர் சூழ்ந்தது மேலும் கடந்த 19 ஆம் தேதி தென்பெண்ணை மற்றும் கெடிலம் ஆறுகளில் ஏற்பட்ட வெள்ளத்தால் மீண்டும் பல்வேறு குடியிருப்பு பகுதிகளில் மழை நீர் சூழ்ந்தது மேலும் விவசாய நிலங்களிலும் மழை நீர் சூழ்ந்தது இதன் காரணமாக பொதுமக்கள் பெரும் அவதிக்கு ஆளாகினர். மேலும் தொடர் மழை மற்றும் வெள்ளம் காரணமாக மாவட்டத்தில் உள்ள பல்வேறு நீர் நிலைகளில் தண்ணீர் வரத்து அதிகமாக காணப்பட்டது . இந்நிலையில் திட்டக்குடி அருகே ராமநத்தம் அடுத்து உள்ள கொரக்கவாடி கிராமத்தில் மருபங்கியா ஓடை உள்ளது. இந்த ஓடைக்கு எதிரே 20 க்கும் மேற்பட்ட குடும்பத்தினர் வசித்து வருகின்றனர். தற்போது பெய்த மழையின் காரணமாக, ஓடை அருகே உள்ள சாலை சேறும் சகதியுமாக உள்ளது. மேலும், அங்கு பாலம் வசதி இல்லாததால் ஓடையில் தண்ணீர் அதிகரித்து சென்றால் , மக்கள் தங்கள் பகுதியில் இருந்து வெளியே வர முடியாத நிலைக்கு ஆளானார்கள். இதனால் மக்கள் அவசர தேவைக்கு கூட அந்த வழியாக வர முடியவில்லை. பள்ளி, கல்லூரிகளுக்கு செல்லும் மாணவ, மாணவிகள் பெரிதும் இன்னலுக்கு உள்ளாகி வருகிறார்கள். இந்நிலையில், சாலையை சீரமைத்து தரக்கோரி, நேற்று அந்த பகுதியில் வசிக்கும் மக்கள், கைக்குழந்தைகளுடன் ஓடைக்குள் இறங்கி போராட்டத்தில் ஈடுபட்டனர். அப்போது அந்த பகுதியில் ஓடும் தண்ணீருக்கு நடுவே மேடான பகுதியில் அமர்ந்து, காத்திருப்பு போராட்டத்தை நடத்தினர் . இதுபற்றி அறிந்த ராமநத்தம் காவல் துறையினர் நேரில் சென்று பேச்சுவார்த்தை நடத்தினர். அப்போது, அதிகாரிகள் நேரில் வந்து பார்வையிட்டு கோரிக்கைகளை நிறைவேற்றி தருவதாக உறுதி அளித்தால் தான் போராட்டத்தை விலக்கி கொள்வோம் என்று கிராம மக்கள் தெரிவித்தனர். அதன்பேரில், மங்களூர் வட்டார வளர்ச்சி அலுவலர்கள் தண்டபாணி, சண்முக சிகாமணி ஆகியோர் நேரில் வந்து பேச்சவார்த்தை நடத்தினர். அதில் விரைவில் சாலையை சீரமைத்து, ஓடையின் குறுக்கே பாலம் அமைத்து தருவதாக உறுதியளித்தனர். அதன்பேரில் அனைவரும் போராட்டத்தை கைவிட்டு கலைந்து சென்றனர். இந்த சம்பவத்தால் அப்பகுதியில் சிறிது நேரம் பரபரப்பு நிலவியது, மேலும் இதற்கு தற்காலிகமாக சரி செய்து விட்டு விடாமல் மீண்டும் இது போன்று நிகழாமல் இருக்க நிரந்தர தீர்வு காண வேண்டும் என பொதுமக்கள் கோரிக்கை வைத்து உள்ளனர்.

## கடலூரில் ஊருக்குள் புகுந்த முதலையை

# வனத்துறையினர் உதவியின்றி பிடித்த கிராம மக்கள்



கடலூர் மாவட்டத்தில் வடகிழக்கு பருவமழை தொடங்கியதில் இருந்து பரவலாக மழை பெய்து வருகிறது. இதில் கடந்த 4 நாட்களாக மாவட்டம் முழுவதும் அடைமழை பெய்தது.இதனால் தாழ்வான பகுதிகளில் உள்ள குடியிருப்புகளை மழைவெள்ளம் சூழ்ந்ததால், பொதுமக்களின் இயல்பு வாழ்க்கை பெரிதும் பாதிக்கப்பட்டது. இந்த நிலையில் குமரிகடல் மற்றும் அதனை ஒட்டிய இலங்கை கடல் பகுதியில் நிலவும் வளி மண்டல சுழற்சி காரணமாக கடலூர், புதுச்சேரி உள்ளிட்ட பகுதிகளில் கனமழை பெய்யும் என வானிலை ஆய்வு மையம் அறிவித்திருந்தது.அதன்படி கடலூரில் கடந்த 29 ஆம் தேதி அதிகாலை வரை இடைவிடாமல் 4 வது நாளாக ஓரே நாளில் 17 செ.மீ அடைமழை கொட்டி தீர்த்தது.இந்த நிலையில் கடந்த சில தினங்களாக பெய்த மழையால் மீண்டும் ஆற்றில் நீர் வரத்து அதிகமாக காணப்படுகிறது . இந்நிலையில் கடலூர் அருகே உள்ளது வெள்ளக்கரை கிராமம்.

இங்கு 300 க்கும் மேற்பட்ட குடும்பத்தினர் வசித்து வருகின்றனர். கடந்த சில நாட்களாக பெய்த தொடர் மழையால் வெள்ளக்கரை பகுதியை சுற்றிலும் தண்ணீர் தேங்கி உள்ளது. இந்த நிலையில் நேற்று முன்தினம் நள்ளிரவு 11 மணி அளவில் வெள்ளக்கரையில் உள்ள சாலையோரம் முதலை ஒன்று கிடந்தது. இதை பார்த்த அந்த வழியாக சென்ற வாகன ஓட்டிகள், கிராம மக்களிடம் தெரிவித்தனர். இதையடுத்து கிராம மக்கள் திரண்டு வந்து முதலையை பார்த்தனர். அப்போது அந்த முதலை கிராம மக்களை நோக்கி பாய்ந்தது. இதனால் கிராம மக்கள் அலறியடித்துக் கொண்டு நாலாபுறமும் சிதறி ஓடினர் . பின்னர் இதுபற்றி வனத்துறை அதிகாரிகளுக்கு கிராம மக்கள் தகவல் தெரிவித்தனர். ஆனால் வனத்துறை அதிகாரிகள் யாரும் வரவில்லை என கூறப்படுகிறது. இதனால் கிராம மக்கள், பாம்பு பிடி வீரர் ஆன செல்லா உதவியுடன் கிராமத்திற்குள் புகுந்த முதலை மீது வலையை வீசினர்.

பின்னர் அந்த முதலையை லாவகமாக பிடித்தனர். பிடிபட்ட முதலை சுமார் 8 அடி நீளமுடையதும், 200 கிலோ எடை கொண்டதாகவும் இருந்தது. இதையடுத்து அவர்கள் பிடிபட்ட முதலையை, கடலூர் மஞ்சக்குப்பத்தில் உள்ள வனத்துறை அலுவலகத்தில் ஒப்படைத்தனர். பின்னர் வனத்துறை அதிகாரிகள் காலை 10 மணி அளவில், அந்த முதலையை சிதம்பரம் அருகே வக்காரமாரி நீர்த்தேக்கத்தில் கொண்டு சென்று விட்டனர். ஆனால் அந்த முதலை வெள்ளக்கரை கிராமத்திற்குள் எப்படி வந்தது என்பது பற்றி தெரியவில்லை. காரணம், வெள்ளக்கரை சுற்று வட்டார பகுதியில் ஆறு, ஏரி ஏதும் இல்லை. இதனால் கடந்த சில நாட்களாக பெய்த தொடர் மழையால் வெள்ளக்கரை பகுதியை சுற்றிலும் தண்ணீர் தேங்கி நிற்பதால் வெகு தொலையில் உள்ள பரவனாறு அல்லது கெடிலம் ஆற்றில் இருந்து விளை நிலங்கள் வழியாக ஊருக்குள் வந்திருக்கலாம் என அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

# கடலூர்:காதலியை கர்ப்பமாக்கிவிட்டு திருமணத்திற்கு மறுத்தவருக்கு 12 ஆண்டுகள் சிறை!



காட்டுமன்னார்கோவில் தெற்கிருப்பு பெரிய தெருவை சேர்ந்தவர் ராஜேந்திரன். இவருடைய மகன் மணிகண்டன் (30) இவர் சிறகிழந்தநல்லூர் கீழஅதங்குடியை சேர்ந்த 25 வயது இளம்பெண்ணை காதலிப்பதாக ஆசைவார்த்தை கூறி பழகி வந்தார். இந்நிலையில் கடந்த 01.01.2015 அன்று மதியம் 1 மணி அளவில் அந்த இளம்பெண் வீட்டுக்கு அருகில் உள்ள கருவக்காட்டில் 2 பேரும் பேசிக்கொண்டிருந்தனர். அப்போது அந்த இளம்பெண்ணிடம், மணிகண்டன் பொங்கல் பண்டிகை முடிந்து உன்னை திருமணம் செய்து கொள்கிறேன் என்று சத்தியம் செய்துள்ளார். பின்னர் அந்த இளம் பெண்ணை கட்டாயப்படுத்தி, அவர் பாலியல் உறவு கொண்டுள்ளார். இதை யாரிடமும் சொல்லாதே என்றும், நான் உன்னை திருமணம் செய்து கொள்ள வேண்டும் என்றால் என்னுடன் நீ வர வேண்டும் என்று கூறி பாலியல் வன்கொடுமை செய்துள்ளார். இதனால் கர்ப்பமான அந்த இளம்பெண் இது பற்றி மணிகண்டனிடம் கூறி, திருமணம் செய்து கொள்ள வேண்டும் என்றார்.அதற்கு அவர் கருவை கலைப்பதற்காக மாத்திரை வாங்கி கொடுத்துள்ளார். ஆனால் அவர் அதை சாப்பிடாமல் இருந்ததால்,6 மாத கர்ப்பிணியானார். பின்னர் இது பற்றி அவரிடம் சொன்னதற்கு நீ யார் என்றே தெரியாது என்று கூறி விட்டார். இதையடுத்து பாதிக்கப்பட்ட இளம்பெண் சேத்தியாத்தோப்பு அனைத்து மகளிர் காவல் துறையினரிடம் புகார் செய்தார் . அதன்பேரில் காவல் துறையினர் அவரை அழைத்து விசாரித்தனர். அப்போது குழந்தை பிறந்தவுடன் திருமணம் செய்து கொள்வதாக கூறி, அள்ளூர் மாரியம்மன் கோவிலில் வைத்து கடந்த 20.05.2015 அன்று நிச்சயம் செய்து கொண்டார். இதற்கிடையில் அந்த இளம்பெண்ணுக்கு 19.10.2015 அன்று சிதம்பரம் அரசு மருத்துவமனையில் ஆண் குழந்தை பிறந்தது. அதன்பிறகு 6 மாதம் கழித்து கேட்டதற்கு திருமணம் செய்து கொள்ளாமல் காலம் தாழ்த்தி வந்தார். அவரது பெற்றோரிடம் கேட்டதற்கு தனது மகன் திருப்பூருக்கு சென்று விட்டதாகவும், வந்தவுடன் அழைத்து வருவதாகவும் கூறினார். ஆனால் மணிகண்டனுக்கு வேறு பெண்ணுடன் பழக்கம் ஏற்பட்டு, இவரை திருமணம் செய்து கொள்ளாமல் ஏமாற்றியது தெரிந்தது .இது பற்றிய புகாரின் பேரில் சேத்தியாத்தோப்பு மகளிர் காவல் துறையினர் வழக்குப்பதிவு செய்து, மணிகண்டனை கைது செய்தனர். இந்த வழக்கு கடலூர் மகளிர் நீதிமன்றத்தில் நடந்து வந்தது. இவ்வழக்கில் அனைத்து விசாரணைகளும் முடிவடைந்த நிலையில், நேற்று நீதிபதி பாலகிருஷ்ணன் தீர்ப்பு வழங்கினார். அவர் தனது தீர்ப்பில், இவ்வழக்கில் மணிகண்டன் மீதான குற்றம் நிரூபிக்கப்பட்டதால், அவருக்கு 50 ஆண்டுகள் சிறை தண்டனையும், ரூ.1 லட்சத்து 40 ஆயிரம் அபராதமும் விதித்து தீர்ப்பு கூறினார். அபராத தொகையில் ரூ1 லட்சத்து 40 ஆயிரத்தை பாதிக்கப்பட்ட பெண்ணுக்கு இழப்பீடாக வழங்கவும் உத்தரவிட்டார். இவ்வழக்கில் அரசு தரப்பில் வக்கீல் செல்வப்பிரியா ஆஜராகி வாதாடினார்.

## கடலூர்:பேருந்தை நிறுத்தாத டிரைவர்

# வழிமறித்து அரிவாளால் தாக்கிய ரவுடி கும்பல்








புதுச்சேரியில் இருந்து கடலூர் செல்லும் தனியார் பேருந்தை வழி மறித்து அரிவாளால் கண்ணாடியை உடைத்த ரவுடிகள். பேருந்தில் பயணிகள் இருந்த போதே துணிகர சம்பவத்தில் ஈடுபட்ட ரவுடிகளை கைது செய்த ரெட்டிச்சாவடி காவல் துறையினர். புதுச்சேரியில் இருந்து நேற்று மதியம் கடலூர் நோக்கிச் சென்ற ஸ்ரீ லட்சுமி என்ற பேருந்தை மூன்று பேர் இரண்டு சக்கர வாகனத்தில் வந்து வழி மறித்து பேருந்து ஓட்டுநர் தேசிங்கு கத்தியால் தாக்கிவிட்டு அதே அரிவாளால் பேருந்து கண்ணாடியை உடைத்து, பேருந்து ஓட்டுனர் மற்றும் நடத்துனர் கொலை மிரட்டல் விடுத்து சென்றனர். இந்த சம்பவம் பேருந்தில் இருந்த சிசிடிவியில் பதிவாகி இருந்தது. இந்த நிலையில் சிசிடிவி காட்சி வைக் கொண்டு ரெட்டியார் பாளையம் காவல் நிலையத்தில் ஓட்டுனர் மற்றும் நடத்துனர் புகார் அளித்தனர், புகாரின் அடிப்படையில் போலீசார் வழக்குப்பதிவு விசாரணை செய்தனர். விசாரணை மேற்கொண்டதில் கடலூர் பகுதியை சேர்ந்த பிரிதிவி ராஜன் மற்றும் சீனிவாசன், ஆண்டி பகுதியை சார்ந்த மருதுவுடன் இணைந்து பேருந்து வழி மறிந்து தகராறில் ஏற்பட்டது தெரியவந்தது. இது தொடர்பாக விசாரணையில் கூறியதாவது :— மருது பெரிய காட்டு பாளையம் பகுதியில் பேருந்து நிறுத்த முயன்ற போது டிரைவர் நிறுத்தாமல் சென்றதால், ஆத்திரத்தில் அவரது நண்பர்களான ரவுடிகைகளை அழைத்து வந்து மிரட்டல் சம்பவத்தில் ஈடுபட்டதும் மேலும் பேருந்து கண்ணாடியை உடைத்தும் தெரிய வந்துள்ளது. இதனையடுத்து மூன்று பேரையும் கைது செய்த ரெட்டிசாவடி போலீசார் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தி சிறையில் அடைத்தனர். மூன்று ரவுடிகள் பேருந்து கண்ணாடியை உடைத்த சிசிடிவி காட்சி தற்போது வெளியாகி உள்ளது. சிசிடிவி காட்சியில் தோன்றும் ரவுடிகள் பேருந்து ஓட்டுனரை வெட்டிவிட்டு பேருந்து கண்ணாடிகளை தாக்கும் காட்சி புதுச்சேரி பேருந்து ஓட்டுனர் மற்றும் நடத்துனரர்களிடம் அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது.

அகர முதல
தொடர்புக்கு
9597887847
8870884969
Aagaramuthalaa
aagaramuthalaa@gmail.com
டிஜிட்டல் பிரிண்டர்ஸ், பத்திரிக்கை, இலக்கிய பேரவை, கல்விக் குழு

GoLAAH TRAVELS
9490547783
8870884969
கார் வாங்க/ விற்க வேண்டுமா?.
இப்போது 50-க்கும் மேற்பட்ட
கார்கள் உடனுக்குடன்!
எங்களிடம் 24 நேரமும்
கார் வாடகைக்கு
மிக்ககுறைந்த விலையில்
அகர முதல டிஜிட்டல் பிரிண்டர்ஸ்

அகர முதல
மின்னிதழ்
Aagaramuthalaa
www.Aagaramuthalaa.com

விளம்பர தொடர்புக்கு
9597887847 / 8870884969

புதன், டிசம்பர் 08,2021 மயிலாடுதுறை மலர்:12 இதழ்:20

# மயிலாடுதுறை மாவட்ட செய்திகள்

## மயிலாடுதுறை:போலி ஆவணங்கள் மூலம் விவசாயிகளின் பணத்தை சுருட்டிய விஏஓ!

## மயிலாடுதுறை: பழங்காவிரி ஆற்றுப்படுகை ஆக்கிரமிப்புகள் அகற்றம்



குடகு மலையில் காவேரி அடர்ந்த மலைத்தொடரில் உருவாகிதமிழ்நாட்டில் ஓடும் காவிரி நதி,நிலத்தடி நீர் மட்டத்தை உயர்த்துவது,மரங்களின் செழுமையான வளர்ச்சிக்கு உதவுவது,பாசனத்துக்கு பயன்படுவது,குளங்கள்,குட்டைகள்,ஏரிகள் உள்ளிட்ட நீர்நிலைகளுக்கு நீராதாரமாக விளங்குவது என,தான் ஓடும் இடங்களில் எல்லாம் ஏதோ ஒரு வகையில் பசுமையை பரப்பிச் செல்கின்றது. காவிரி பல கிளை நதிகளாக,கிளை வாய்க்கால்களாகப் பிரிந்து பல்வேறு ஊர்களில், பல்வேறு பெயர்களில் வழங்கப்படுகிறது. அவ்வகையில், மயிலாடுதுறை அருகே மகாதானபுரத்தில், காவிரியில் இருந்து பிரியும் கிளை வாய்க்கால் பழங்காவிரி என்ற பெயரில் செல்கிறது. மயிலாடுதுறை அருகே மகாதானபுரம் கிராமத்தில் காவிரியின் கிளை வாய்க்காலாக பிரிந்து, மூவலூர் மாப்படுகை என ஊராட்சிப் பகுதிகளில் 4 கி. மீ தொலைவும், காவிரி நகர் வழியாக மயிலாடுதுறை நகர்ப்புறத்தில் 3.2 கி. மீ தொலைவும் என மொத்தம் 7.2 கி. மீ தொலைவுக்கு ஓடி மயிலாடுதுறையிலேயே ஞானாம்பிகை அரசினர் மகளிர் கலைக் கல்லூரியின் பின்புறம் முற்றுப்பெறுகிறது இந்த பழங்காவிரி. அங்கிருந்து புதிய பழங்காவிரி என்ற பெயரில் சுமார் 8 கி. மீ . தொலைவு ஓடி, காவிரியின் கிளை ஆறான மஞ்சளாற்றில் கலக்கிறது. இதன் மூலம் மயிலாடுதுறை நகராட்சியில் உள்ள 89 குளங்களில், சுமார் 15 குளங்களும், மேலும் சில குளங்கள் புதிய பழங்காவிரி மூலமாகவும் நீராதாரம் பெற்றன. அதன்பயனாக, கூறைநாடு செம்மங்குளம், யானை வெட்டிக்குளம், கிளைச்சிறை பின்புறம் உள்ள மட்டக்குளம், நீதிமன்றம் எதிரில் உள்ள அங்காளம்மன் குளம், புளியந்தெரு குளம், மின்வாரிய அலுவலகம் எதிரில் உள்ள குளம், சந்திரிகுளம் உள்ளிட்ட குளங்கள் நீர் நிரம்பிக் காணப்பட்டன. ஆனால் தற்போது ஆக்கிரமிப்பின் காரணமாக, குளங்களில் கண்ணீர் நிரப்புவது, மழைக்காலங்களில் வடிகால் வசதி இன்றி பல்வேறு சிக்கல் ஏற்பட்டது. இதனைத் தொடர்ந்து மயிலாடுதுறை நகர பகுதியில் உள்ள காவிரி, பழங்காவிரி ஆறுகளில் அதிக அளவில் ஆக்கிரமிப்புகளால் நீர்நிலைகள் பாழாவதை தடுத்து, நீர்நிலைகளை பாதுகாக்க வேண்டுமென்று புங்கனூர் நுகர்வோர் பாதுகாப்புக்குழுவைச் சேர்ந்த விஜயகுமார் என்பவர், சென்னை பசுமை தீர்ப்பாயத்தில் வழக்கு தொடர்ந்தார். வழக்கை விசாரித்த பசுமை மயிலாடுதுறை தாலுக்கா மூவலூரில் காவிரியின் கிளை ஆறான பழங்காவேரி பிரிந்து சுமார் 7.2 கிலோமீட்டர் சென்று மயிலாடுதுறை நகரில் முடிவடையும் ஆற்றில் உள்ள வீடுகள், காம்பவுண்ட் சுவர்கள், வேலிகள் அமைத்து ஆக்கிரமிப்புகளை அகற்றி உத்தரவிட்டது. உத்தரவின்பேரில் இந்த ஆக்கிரமிப்புகளை அகற்றும் பணி இன்று தொடங்கியது. மூவலூர் தலைப்பில் இருந்து சித்தர்காடு வரை இன்று ஆக்கிரமிப்புகள் அகற்றப்பட்ட உள்ளது. இதில் வீடுகளை தவிர்த்து 24 இடங்களில் மேற்கொள்ளப்பட்டிருந்த காம்பவுண்டு சுவர்கள், வேலிகள் ஆகிய ஆக்கிரமிப்புகளை பொதுப்பணித்துறையினர் பொக்லைன் இயந்திரம் கொண்டு அகற்றினர். இப்பணிகளை மயிலாடுதுறை வருவாய் கோட்டாட்சியர் பாலாஜி, வட்டாட்சியர் ராகவன், பொதுப்பணித்துறை உதவி பொறியாளர் கண்ணதாசன் உள்ளிட்டோர் பார்வையிட்டு ஆய்வு செய்தனர். இப்பணி தொடர்ந்து நடைபெறும் என பொதுப்பணித்துறை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்

### மயிலாடுதுறையில் சட்ட விரோத செயல்களில் ஈடுபடும் நபர்கள் குறித்து

## மாவட்ட காவல்துறை சார்பில் விழிப்புணர்வு



மயிலாடுதுறை மாவட்டத்தில் புகையிலை மற்றும் போதை பொருட்கள் விற்பனை செய்வதை தடுக்கும் வகையில் மாவட்ட காவல்துறை சார்பில் விழிப்புணர்வு நோட்டீஸ் பள்ளி மற்றும் கடைகளில் ஒட்டப்பட்டது. மயிலாடுதுறை நகர் பகுதியில் உள்ள நகராட்சி மேல்நிலைப்பள்ளியில் நடைபெற்ற இந்த நிகழ்ச்சியில் மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளர் சுகுணா சிங் சட்ட விரோத செயல்களில் ஈடுபடுபவர்கள் குறித்து மாணவர்கள் மற்றும் பொதுமக்கள் தயங்காமல் புகார் அளிக்கும்படி விழிப்புணர்வு ஏற்படுத்தினார். போதைப் பொருட்கள், புகையிலை மற்றும் மணல் திருட்டு, விபச்சாரம் உள்ளிட்ட சட்ட விரோத செயல்களில் ஈடுபடும் நபர்கள் குறித்து புகார் தெரிவிக்க தொலைபேசி எண்ணுடன் கூடிய விழிப்புணர்வு பதாதைகள் பள்ளியின் நுழைவுவாயில் மற்றும் வளாகங்களில் காவல்துறை சார்பில் ஒட்டப்பட்டது. மேலும் பள்ளிகளை சுற்றி நூறு மீட்டர் தொலைவில் உள்ள கடைகளில் இந்த விழிப்புணர்வு பதாகைகள் ஒட்டப்பட்டது. தொடர்ந்து இதுபோன்று சட்டவிரோத செயல்களில் ஈடுபடும் நபர்கள் குறித்து தகவல் தெரிவிக்கும்படி அருகில் உள்ள கடைகளில் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் சுகுணா சிங் அறிவுறுத்தினார். கடைகளில் பணிபுரியும் ஊழியர்கள் முக கவசம் அணியும் படி காவல்துறை சார்பில் அறிவுறுத்தப்பட்டது. இதில் மாவட்ட காவல்துறை துணை கண்காணிப்பாளர் வசந்தராஜ், காவல்துறை ஆய்வாளர் செல்வம் உள்ளிட்ட காவல்துறை அதிகாரிகள் பங்கேற்றனர்.

## மயிலாடுதுறை: அம்பேத்கர் நினைவு தினம் இருதரப்பினரிடையே மோதல்





மயிலாடுதுறை அருகே பட்டவர்த்தி பேருந்து நிறுத்தத்தில் விடுதலை சிறுத்தை கட்சியினர் புதிதாக அம்பேத்கர் உருவபடம் வைத்து அஞ்சலி செலுத்த ஒரு தரப்பினர் எதிர்ப்பு தெரிவித்திருந்த நிலையில், எதிர்ப்பை மீறி விடுதலை சிறுத்தை கட்சியின் முன்னாள் மாவட்ட செயலாளர் அம்பேத்கர் படத்திற்கு மாலை அணிவித்ததால் பரபரப்பு ஏற்பட்டது. அதனை தொடர்ந்து இருதரப்பினரும் கற்களை வீசி தாக்குதலில் ஈடுப்பட்டதால் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் மற்றும் வருவாய் துறையினர் சம்பவ இடத்தில் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர். மயிலாடுதுறை மாவட்டத்தில் சட்ட மேதை அம்பேத்கரின் 65 ஆம் ஆண்டு நினைவு தினம் பல்வேறு இடங்களில் அனுசரிக்கப்பட்டது. இந்நிலையில் மயிலாடுதுறை அருகே பட்டவர்த்தி கிராமத்தின் பேருந்து நிறுத்தத்தில் இன்று விடுதலை சிறுத்தைகள் கட்சியின் முன்னாள் மாவட்ட செயலாளர் ஈழவளவன் தலைமையில் புதிதாக அம்பேத்கரின் உருவப் படத்தை வைத்து அஞ்சலி செலுத்த நிகழ்ச்சி ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இதனால் ஜாதி மோதல் ஏற்படும் என்று கூறி மற்றொரு பிரிவினர் எதிர்ப்பு தெரிவித்திருந்தனர். எதிர்ப்பு காரணமாக முன்னதாக பட்டவர்த்தி கிராமத்தில் போலீசார் குவிக்கப்பட்டு பதட்டமான சூழ்நிலை நிலவியது. இந்நிலையில் அங்கு வந்த விடுதலை சிறுத்தை கட்சியின் முன்னாள் மாவட்ட செயலாளர் ஈழவளவன் அம்பேத்கர் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். அப்போது அவர்கள் மீது மற்றொரு சமூகத்தினர் கற்களை வீசி தாக்குதல் நடத்தினர். அதனை தொடர்ந்து இரண்டு தரப்பினரும் கற்களை வீசி மாறி மாறி கற்களால் தாக்கிக் கொண்டனர். உடனடியாக அங்கு பாதுகாப்பு பணியில்இருந்த போலீசார் லேசான தடியடி நடத்தி அவர்களை கலைத்தனர். இதனால் பட்டவர்த்தியில் மேலும் கலவரம் ஏற்படாதவாறு டாஸ்மாக் கடை மற்றும் உள்ளூர் கடைகள் அடைக்கப்பட்டன . இந்தச் சம்பவத்தில் காயமடைந்த விடுதலை சிறுத்தைகள் கட்சியினர் 5 பேர் சிகிச்சைக்காக மயிலாடுதுறை அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சையில் உள்ளனர். இச்சம்பவம் தொடர்பாக மயிலாடுதுறை மாவட்ட காவல் கண்காணிப்பாளர் சுகுணா சிங் மற்றும் மயிலாடுதுறை கோட்டாட்சியர் பாலாஜி சம்பவ இடத்திற்கு விரைந்து சென்று விசாரணை நடத்தி வருகின்றனர். இந்த சம்பவத்தால் பட்டவர்த்தி கிராமத்தில் பதட்டமான சூழல் நிலவியது.

விளம்பர தொடர்புக்கு
9597887847
8870884969

## மயிலாடுதுறை படியில் பயணித்த மாணவர்கள்

# பேருந்தை பாதியில் நிறுத்திய ஓட்டுநர்





மயிலாடுதுறை சுற்றுவட்டார கிராமங்களில் இருந்து பள்ளி, கல்லூரி மாணவர்கள், பொதுமக்கள் என ஆயிரக்கணக்கானோர் தினசரி மயிலாடுதுறை நகருக்கு பேருந்து மூலம் வந்து செல்கின்றனர். இதில்இ சில உள்கிராமங்களுக்கு ஓரிரு பேருந்துகள் மட்டுமே இயக்கப்பட்டு வருகிறது. இதனால் கூட்ட நெரிசலையும் பொருட்படுத்தாமல் மாணவர்கள் ஆபத்தான முறையில் படிக்கட்டுகளில் தொங்கியபடியே பயணம் செய்வது வாடிக்கையாக உள்ளது. இந்நிலையில் மயிலாடுதுறையில் இருந்து மணல்மேடு வழியாக பாப்பாகுடி சென்ற அரசுப் பேருந்தில் மக்கள் கூட்டம் அதிகளவில் இருந்துள்ளது. இதனால் மாணவர்கள் பலர் பேருந்து படிக்கட்டுகளில் தொங்கியபடியே பயணித்துள்ளனர். அவர்களை உள்ளே நிற்கச்சொல்லி ஓட்டுநர் பலமுறை சத்தமிட்டும் இருந்தும் அதனை சிறிதும் பொருட்படுத்தாத மாணவர்கள் படிக்கட்டுகளில் தொங்கியபடியே வந்துள்ளார்.இதனால் பேருந்தை இயக்கமுடியாமல் சிரமமடைந்த பேருந்தின் ஓட்டுநர், ஒருகட்டத்தில் ஆத்திரமடைந்து அரசுப்பேருந்தினை நடு ரோட்டிலேயே நிறுத்தி விட்டு அங்கிருந்து சென்றதால் பரபரப்பு ஏற்பட்டது. இதனால் அரை மணி நேரமாக சாலையிலேயே நின்றுகொண்டிருந்த பேருந்தால் போக்குவரத்து பாதிக்கப்பட்டதுடன் நெரிசலில் சிக்கி ஆம்புலன்ஸ்ம் செல்லமுடியாமல் சிக்கிக்கொண்டது. பின்னர் வெகுநேரம் கழித்து அங்கு வந்த ஓட்டுனர் பேருந்தினை எடுத்து சாலையின் ஓரமாக நிறுத்தினார். தொடர்ந்து சம்பவ இடத்திற்கு வந்த மயிலாடுதுறை காவல்துறையினர் ஓட்டுநரை சமாதானம் செய்து பேருந்தினை இயக்கும்படி கூறியதன் பேரில் ஓட்டுனர் பேருந்தினை இயக்கி சென்றார். அதிக அளவு பயணிகளை ஏற்றியதால் கோபமடைந்து ஓட்டுனர் சாலையிலேயே பேருந்தை நிறுத்தி சென்ற சம்பவம் அப்பகுதியில் பரபரப்பை ஏற்படுத்தியது.

இதுகுறித்து, துறை அதிகாரிகளிடம் கேட்டதற்கு, மணல்மேடு உள்ளிட்ட மார்க்கத்தில் பீக் ஹவர்ஸ் என்று சொல்லப்படும் காலை, மாலை வேளைகளில் கூடுதல் பேருந்துகளை இயக்குவது குறித்து ஆலோசிக்கப்பட்டு வருவதாகவும் விரைவில் கூடுதல் பேருந்துகள் இயக்க நடவடிக்கை எடுக்கப்படும் என தெரிவித்தனர். இது ஒரு புறம் இருக்க கொரோனா வைரஸ் தொற்று வழிகாட்டுதலின் படி பள்ளி, கல்லூரி மாணவ, மாணவிகள் சமூக விலகலை பின் படுத்தும் விதமாக சுழற்சி முறையில் வகுப்புகள் நடத்த உத்தரவிட்டுள்ள தமிழ்நாடு அரசு, அதனை பேருந்துகளிலும் கடைப்பிடிக்காமல் இவ்வாறு மூச்சு விட கூட இடம் இல்லாத அளவிற்கு கூட்டம் மிகுந்த பேருந்துகளில் மாணவர்கள் பயணித்தால் கொரோனா வைரஸ் தொற்று பரவாதா? என கேள்வி எழுப்பியுள்ள சமூக ஆர்வலர்கள் இதனை கருத்தில் கொண்டு அரசு மாணவர்கள் சமூக விலகலை பின் படுத்தும் விதமாக காலை மற்றும் மாலை வேளைகளில் அவர்களுக்கென தனி பேருந்து இயக்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

## மயிலாடுதுறையில் பாஜக நடத்திய மாட்டு வண்டி பேரணி

# தடுத்து நிறுத்திய போலீசார்



கடந்த மாதம் பாரத பிரதமர் நரேந்திர மோடி பெட்ரோல் லிட்டருக்கு 5 ரூபாயும் டீசல் லிட்டருக்கு 10 ரூபாய் விலை குறைப்பு செய்து நடவடிக்கை எடுத்திருந்தார். அதனை தொடர்ந்து ஒரு சில மாநிலங்கள் மாநில பெட்ரோல்இ டீசல் உள்ளிட்ட எரிபொருள் மீதான வாட் வரி குறைத்தனர். இதில் அதிகபட்சமாக பஞ்சாப் மாநிலத்தில் லிட்டருக்கு 19 ரூபாய் வரை விலை குறைக்கப்பட்டது. இந்நிலையில் தமிழ்நாடு பாரதிய ஜனதா கட்சியினர் தமிழ்நாடு அரசு பெட்ரோல் டீசல் உள்ளிட்ட எரிபொருள் மீதான வாட் வரியை குறைக்க வலியுறுத்தி மனிதச் சங்கிலி போராட்டம், ஆர்ப்பாட்டம் என பல்வேறு வகையான போராட்டங்களை தமிழ்நாடு அரசுக்கு எதிராக ஈடுபட்டு வருகின்றனர்.அதன் ஒன்றாக பெட்ரோல், டீசல் விலையை உயர்வை தமிழ்நாடு அரசு குறைக்க கோரி மயிலாடுதுறை மாவட்ட பாரதிய ஜனதா கட்சியினர் கடந்த சில தினங்களாக பல்வேறு போராட்டங்களை கையில் எடுத்து வருகின்றனர் அதன் தொடர்ச்சியாக மயிலாடுதுறை மாவட்டம் மணல்மேட்டில் பாரதிய ஜனதா கட்சியினர் மாட்டுவண்டி பேரணியை தொடங்கினர். மயிலாடுதுறை மாவட்ட பாரதிய ஜனதா கட்சி விவசாய அணி தலைவர் கஜேந்திரன் தலைமை நடைபெற்ற பேரணியில் மாநில செயலாளர் தங்க. வரதராஜன் கலந்து கொண்டு பெட்ரோல், டீசல் விலையை உயர்வை குறைக்காத தமிழ்நாடு அரசை கண்டித்து முழுக்கமிட்டு 50க்கும் மேற்பட்ட மாட்டுவண்டியில் பேரணியாக தமிழ்நாடு அரசை கண்டித்து கோஷங்களை எழுப்பியவாறு சென்றனர். இந்நிலையில், மணல்மேடு காவல் துறையினர் மாட்டுவண்டி பேரணிக்கு அனுமதி இல்லை என கூறி தடுத்து நிறுத்தினர் தொடர்ந்து தடையை மீறி மாட்டுவண்டி பேரணி நடத்தினால் கைது செய்வோம் என தெரிவித்து மாட்டுவண்டி பேரணியை தடுத்தனர். இதனால் அப்பகுதி பரபரபரப்பு ஏற்பட்டது. இதையடுத்து மாட்டு வண்டி பேரணியை விலக்கி கொண்ட பாரதிய ஜனதாயினர் தங்கள் போராட்டத்தை மாற்றி மணல்மேடு பேருந்து நிலையத்தில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். ஆர்ப்பாட்டத்தின் போது தமிழ்நாடு அரசுக்கு எதிராக கண்டன முழக்கங்களை எழுப்பினர். பின்னர் ஆர்பாட்டத்தில் ஈடுபட்ட 20 பெண்கள் உட்பட 100பாரதிய ஜனதா கட்சியினரை மணல்மேடு காவல்துறையினர் கைது தனியார் திருமண மண்டபத்தில் அடைத்தனர்.

அகர முதல

தொடர்புக்கு 9597887847 8870884969

Aagaramuthalaa aagaramuthala@gmail.com

டிஜிட்டல் பிரிண்டர்ஸ், பத்திரிக்கை, இலக்கிய பேரவை, கல்விக் குழு

## மயிலாடுதுறை: போலி ஆவணங்கள் மூலம் விவசாயிகளின் பணத்தை சுருட்டிய விஏஓ



மயிலாடுதுறை மாவட்டம் மயிலாடுதுறை தாலுக்கா அகரகீரங்குடி ஊராட்சியில் உள்ளது முட்டம் கிராமம். இந்த கிராமத்தில் கடந்த 2020 ஆம் ஆண்டு சுமார் 450 ஏக்கர் நிலப்பரப்பில் விவசாயிகள் சம்பா சாகுபடி செய்திருந்தனர். அந்த பயிர்களுக்கு, சிட்டா, அடங்கலுடன் கிராம நிர்வாக அலுவலர் திருமலைசங்கு என்பவரிடம் சமர்ப்பித்து பயிர்க்காப்பீட்டினையும் செய்திருந்தனர். அந்த பருவத்தில் பெய்த கனமழையின் காரணமாக சம்பா பயிர்களுக்கான இழப்பீட்டுத் தொகையாக ஏக்கருக்கு 68 சதவீதத் தொகையாக 22 ஆயிரம் ரூபாய் காப்பீட்டு நிறுவனம் அறிவித்தது. இந்த காப்பீட்டுத் தொகையானது பல விவசாயிகளுக்கு வந்து சேரவில்லை. இதையடுத்து, இழப்பீட்டுத் தொகை கிடைக்காத விவசாயிகள் வேளாண்துறை அதிகாரிகளை அணுகி விபரம் கேட்டுள்ளனர். வேளாண் துறை அதிகாரிகள் அவர்களிடம் உழவன் செயலியை பயன்படுத்தி காப்பீட்டுத் தொகை வழங்கப்பட்டுள்ளதா என்பதை தெரிந்து கொள்ளலாம் என விளக்கியுள்ளனர். அதனைத் தொடர்ந்து விவசாயிகள் உழவன் செயலில் பார்த்த போது அவர்களுக்கு பெரும் அதிர்ச்சி காத்திருந்தது, அதில் அதே புல எண்ணில் வேறொரு நபர்களுக்கு தொகை செலுத்தப்பட்டிருந்தது தெரியவந்தது. இதையடுத்து, அந்த நபர்கள் யார் எனப்பார்த்ததில், அவர்கள் அனைவருமே கிராம நிர்வாக அலுவலர் திருமலை சங்குவின் மனைவி, மகள் மற்றும் உறவினர்கள் என்பது தெரியவந்தது . மேலும் அதிர்ச்சியாக சிலரது புல எண்ணுக்கான காப்பீட்டுத் தொகை கிராம நிர்வாக அலுவலர் திருமலைசங்குவின் பெயருக்கே வரவு வைக்கப்பட்டிருந்தது. இதையடுத்து, அவரிடம் நேரில் சென்று விவசாயிகள் கேட்டபோது அவர் அலட்சியமாக பதிலளித்ததாக கூறப்படுகிறது. இதையடுத்து, பாதிக்கப்பட்ட விவசாயிகள் மயிலாடுதுறை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நேற்று புகார் அளித்தனர். அப்புகாரில் கிராம நிர்வாக அலுவலர் திருமலைசங்கு போலியான சிட்டா, அடங்கல் வழங்கி மறையூர் கூட்டுறவு வங்கியில் கடன் பெற்றும், அதன்பேரில் பயிர்க்காப்பீடு பெற்றும் ஊழல் செய்துள்ளதாகவும், அவர் மீது விசாரணை செய்து ஒழுங்கு நடவடிக்கை எடுக்க வலியுறுத்தியுள்ளனர். காப்பீடு மூலம் மட்டுமே சுமார் 100 ஏக்கர் பயிருக்கு 22 லட்சம் ரூபாய் முறைகேட்டில் ஈடுபட்டுள்ள தாகவும், வங்கிக் கடன் பெற்ற வகையில் பல லட்சம் முறைகேடு செய்துள்ளதாகவும் விவசாயிகள் குற்றம் சாட்டியுள்ளனர். இது குறித்து மாவட்ட வருவாய் அலுவலர் முருகதாஸ் உத்தரவின் பேரில் கோட்டாட்சியர் பாலாஜி அவர்கள் ஆவணங்களை சரிபார்த்ததில் வி.ஏ.ஓ போலி ஆவணங்கள் மூலம் மோசடி செய்தது தெரியவந்தது. இதையடுத்து விஏஓ திருமலைசங்கு அவர்களை பணியிடை நீக்கம் செய்து கோட்டாட்சியர் உத்தரவிட்டுள்ளார். மேலும் இதுபோல் முறையீட்டில் வேறு சில கிராம நிர்வாக அலுவலர்கள் ஈடுபட்டுள்ளனர் என்று சந்தேகம் எழுந்துள்ளதாக மயிலாடுதுறை மாவட்ட விவசாயிகள் அச்சம் தெரிவித்துள்ளனர்.

## தரங்கம்பாடி: 40 பயனாளிகளுக்கு உதவித்தொகை ஆணை

# எம்எல்ஏ நிவேதா முருகன் வழங்கினார்



மயிலாடுதுறை மாவட்டம் தரங்கம்பாடி வட்டாட்சியர் அலுவலகத்தில் நாற்பது பயனர்களுக்கு உதவித்தொகை ஆணை வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது. தரங்கம்பாடி வட்டாட்சியர் ஹரிஹரன் தலைமையில் நடைபெற்ற நிகழ்ச்சியில் பூம்புகார் சட்டமன்ற உறுப்பினர்களும் இந்த வடக்கு மாவட்ட திமுக நிவேதா எம். முருகன் 40 பயனாளிகளுக்கு முதலமைச்சர் உழவர் பாதுகாப்புத் திட்ட உதவித் தொகை, ஊனமுற்றோர் உதவித்தொகை, இந்திரா காந்தி முதியோர் உதவித்தொகை, விதவை உதவித்தொகை வழங்குவதற்கான ஆணையும் மற்றும் 4 நபர்களுக்கு குடும்ப வழங்கி பேசினார். நிகழ்ச்சியில், என். பி. இந்துமதி (ச. பா. தி), மாவட்ட திமுக துணைச் செயலாளர் ஞானவேலன், மாவட்ட பொருளாளர் ஜி. என். ரவி, தெற்கு ஒன்றிய செயலாளர் அப்துல் மாலிக், நகர செயலாளர் வெற்றிவேல், ஒன்றிய குழு தலைவர் நந்தினி ஸ்ரீதர், வட்ட வழங்கல் அலுவலர் பாபு, வருவாய் ஆய்வாளர்கள், கிராம நிர்வாக அலுவலர்கள் மற்றும் கட்சி நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்

## திருக்கடையூர் ஸ்ரீ அமிர்தகடேஸ்வரர் கோவிலில் 1008 சங்காபிஷேகம்

மயிலாடுதுறை மாவட்டம் திருக்கடையூர் அமிர்தகடேஸ்வரர் கோவிலில் கார்த்திகை மாத சோமவரத்தை முன்னிட்டு 1008 சங்காபிஷேகம் விழா திங்கள்கிழமை நடைபெற்றது. திருக்கடையூரில் மிகவும் பிரசித்தி பெற்ற ஸ்ரீ அமிர்தகடேசுவரர் அபிராமி அம்மன் கோவில் உள்ளது. இந்த கோவிலுக்கு ஏராளமானோர் பக்தர்கள் வந்து சாமி தரிசனம் செய்து செல்கின்றனர். மேலும் இத்திருத்தலத்தில் மட்டுமே ஆயுஷ் ஹோமம், சதாபிஷேகம், மணிவிழா, மற்ற யாகபூஜைகள் நடைபெறுவதால் பல மாநிலங்களில் இருந்து இங்கு வந்து மேற்கண்ட பூஜைகள் செய்து வழிபாடு செய்து செல்கின்றனர். பல்வேறு சிறப்பு பெற்ற அமிர்தகடேஸ்வரர் கோவிலில் கார்த்திகை மூன்றாம் சோமவாரத்தை முன்னிட்டு 1008 சங்காபிஷேகம் நடைபெற்றது. முன்னதாக புனித நீர் அடங்கிய குடங்கள் சங்குகளும் வைத்து கோயில் குருக்கள் சிறப்பு யாகம் நடத்தினர். பின்னர் புனித நீர் அடங்கிய குடங்கள் ஊர்வலமாக எடுத்து செல்லப்பட்டு சாமிக்கு அபிஷேக ஆராதனை செய்யப்பட்டது. இதில் ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டு சாமி தரிசனம் செய்தனர்